**மிஹிந்தலை பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மிஹிந்தலை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள் / உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிஹிந்தலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்ரான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் இலக்கம் 3.29 பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டில் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு ரூபா 68,500 ஆன தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நானாவித வைப்புக் கணக்கில் இது உள்ளடக்கப்பட்டுள்ளது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

#### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மூலதன மானியமாக பெறப்பட்ட ரூபா 935,000 ஆன மோட்டார் வாகனங்களின் பெறுமதி மற்றும் சபையின் நிதியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 134,500 ஆன தளாடங்களின் பெறுமதி திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் சபை அலுவலக கட்டிடத்தில் 10 கிலோ வோட் சூரிய பௌலை நிறுவுவதற்கான கிரயமான ரூபா 2,963,142 நிலையான சொத்தொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிலையான சொத்துக்கள் சரியாக இணங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் LDSP செயற்திட்டத்திலிருந்து மூலதனப் பெறுவனவுகளாக ரூபா 7,388,142 மாத்திரம் பெறப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய செலவுகள் ரூபா 7,554,606 ஆக அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 ஆம் ஆண்டில் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்கான ரூபா 340,668 ஆன நீதிமன்ற தண்டப் பண வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்படாமையால் பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் அந்தப் பெறுமதியால் குறைவடைந்திருந்தது. | 2012 ஆம் ஆண்டு முதல் காணப்பட்ட வருகின்ற கடன் தொகையொன்று என்பதால் நீண்டகாலக் கடன்களின் கிழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | சபைக்குச் சொந்தமான நிலமொன்றில் கடை அறைகள் நிர்மாணிப்பதற்காக அக்கடை அறைகளை நிர்மாணித்த நபரால் மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகளின் பெறுமதி ரூபா 48,614,832 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக சபை அவருக்குச் செலுத்தப்பட வேண்டிய அத் தொகை சபையின் செலவொன்றாக அங்கீகரிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்படாது திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | 67 கடை அறைகளுக்காகப் பட்டியலிடப்பட வேண்டிய வருமானம் ரூபா 3,912,000 ஆக இருந்த போதும் அது ரூபா 1,956,000 ஆக குறைவாகப் பட்டியலிடப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் ரூபா 66,000 ஆன தளபாடங்கள் கொள்வனவு இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்கள் அப் பெறுமதியால் அதிகரித்திருந்தது. | -மேற்படி- | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | மீளாய்வாண்டில் மூலதன மானியமாக பெறப்பட்ட ரூபா 1,690,000 ஆன கணனியின் பெறுமதி மற்றும் ரூபா 2,735,000 ஆன உபகரணங்களின் பெறுமதி மூலதன மானியக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாது திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.3 இணக்கப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீண்டு வரும் செலவிற்காக பெறப்பட்ட மானியம் மற்றும் பௌதீக திட்டத்திற்காகப் பெறப்பட்ட மானியங்களின் பெறுமதி விரிவான வருமானக் கூற்றின் பிரகாரம் ரூபா 34,722,213 ஆக இருந்த போதிலும் கணக்கீட்டு குறிப்பின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 24,876,523 ஆக இருந்தமையால் ரூபா 9,895,690 ஆன வித்தியாசமொன்று காணப்பட்டது. | ஏற்றுக் கொள்கிறேன். | அட்டவணை தொடர்புபட்ட அறிக்கையுடன் இணக்கபபட்டு திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கணனிகள் கொள்வனவு, அட்டவணையின் பிரகாரம் ரூபா 1,956,616 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றின் குறிப்ப 16 இன் பிரகாரம் அது ரூபா 2,129,616 ஆக இருந்தமையால் ரூபா 173,000 ஆன வித்தியாசமொன்று காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| மயானம் | 110,300,000 | • மீதி உறுதிப்படுத்தல்<br>• காலப் பகுப்பாய்வு விரிவான அட்டவணை | அட்டவணை யொன்று சமர்ப்பிக்கப்பட் டதாக | உறுதிப் படுத்தல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 1,613,198 ஆக இருந்ததுடன் அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த செலவு் ரூபா 3,760,906 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய வருடத்துடன் தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம | சேகரிக்கப் பட்ட வருமானம் | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 1,280,200 | 1,674,260 | 1,674,260 | 101,844 | 1,045,050 | 1,296,700 | 1,296,700 | 101,844 |
| (ii) | வாடகை | 10,368,103 | 15,329,120 | 1,417,169 | 16,018,600 | 8,419,674 | 8,336,571 | 11,007,626 | 2,106,649 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 225,100 | 635,813 | 634,308 | 60,005 | 105,000 | 143,840 | 85,340 | 58,500 |
| (iv) | ஏனைய வருமானம் | 4,359,850 | 19,025,959 | 17,865,420 | 7,153,108 | 4,084,250 | 7,170,583 | 6,908,338 | 5,992,569 |
| | | 16,233,253 | 36,665,152 | 21,591,157 | 23,333,557 | 13,653,974 | 16,947,694 | 19,298,004 | 8,259,562 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தலின் செயல்திறன் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| 2023 சனவரி 01 இல் காணப்பட்ட ரூபா 101,844 ஆன குப்பை வரி நிலுவையை அறவிடுவதற்கு 2023 ஆம் ஆண்டிலும் சபை தவறியிருந்தது. | குப்பை மேடைகள் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடனடியாக அறவிடப்பட வேண்டும். |

(ஆ) **வாடகை**

| | | |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் ரூபா 1,628,148 ஆன கடை வாடகை நிலுவையாக காணப்பட்டது. | தற்போது பெருமளவிலான நிலுவைத் தொகை அறவிடப்பட்டுள்ளதாக | நிலுவை கடை வாடகை உடனடியாக அறவிடப்பட வேண்டும். |

(இ) **ஏனைய வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2023 ஆம் ஆண்டின் நிலுவையும் உட்பட விளம்பரப் பலகைக்காக பெற வேண்டிய ரூபா 964,150 ஆன கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | விரைவில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து 2023 திசெம்பர் 31 இல் பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டம் ரூபா 3,012,849 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,718,500 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | பெற வேண்டிய தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்ாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 முக்கிய விடயங்களை நிறைவேற்றுவதற்கு உப விதிகள் விதிக்கப்படுவதற்கு முடியுமான போதிலும் 2023 திசெம்பர் 31 வரையில் அந்த விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் உப விதிகள் விதிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 2023 ஆம் வருடத்தில் சபையால் குப்பைகள் சேகரிக்கப்பட்டிருக்காததால் சபைக்கு பெற வேண்டிய வருமானமொன்று இழக்கப்பட்டிருந்ததுடன், அதிகாரப் பிரதேசத்தில் குப்பைகள் முறையற்ற விதத்தில் அகற்றப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டு முதல் குப்பைகள் முறையாக அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரப்பிரதேசஙகளில் குப்பைகள் சேகரிக்கப்பட்டு முறையாக அகற்றப்படல் வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 2023 பொசோன் விழாவிற்காக பிரதேச சபையின் 04 அதிகாரிகளுக்கு அவர்களின் மாதாந்த சம்பளத்திற்கு சமனான கொடுப்பனவொன்றாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 132(ச) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 162,610 ஆனது 2023 யூன் மாதத்தில் செலுத்தப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட காலத்தில் பணிப்பகுதிகளை நிறைவேற்றிய அதிகாரிகளுக்கு இக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்ததாக. பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் கொடுப்பனவ செலுத்தப்பட்டமை நியாயமானது. | பிரதேச சபை சட்டத்தின் 132(ச) பிரிவின் கீழ் இதற்காக கொடுப்பனவு செய்ய முடியாது என்பதால் மீண்டும் அறவிடப்பட வேண்டும். |

### 3.4 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| பாவனையிலிருந்து நீக்கப்பட்ட 05 வாகனங்கள் அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது சபை வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. | RK 80 கைட்ராக்டர் மற்றும் ட்ரோலர் என்பவற்றை பழுதுபார்ப்பதற்கு அல்லது அவ்வாறு செய்ய முடியாவிட்டால் ஏலத்தில் விடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | அகற்றப்படும் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 4.1 ஒதுக்கீடுகள் வழங்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணிகள் தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2024 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக | செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |